உ


கடவுள் துணை.

ஸ்ரீ பாரதப்புத்திரப் பள்ளிக்கூட பாலியர்கள் நிறைந்த பாலவிநோத நாடக சபையார் பாடிவரும்

பழநியப்பன்

# பஜனாமிர்தம்.

(முதற்பாகம்)



முன்பதிப்புக்கு இணங்க

கா. கி. கோபால் முதலியார்

அவர்களால்

சென்னை சூளை,

ஸ்ரீ வேதவல்லி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1931. [அணா 1.

நெ. 27, அவதானம்பாப்பையர் 2-வது சந்து சூளை, மதராஸ்.

உ

கடவுள் துணை.

ஸ்ரீ பாரதப்புத்திரப் பள்ளிக்கூட பால்யர்கள் நிறைந்த
பாலவிநோத நாடக சபையார் பாடிவரும்

## பழநியப்பன்

# பஜனாமிர்தம்.

(முதற்பாகம்)



முன்பதிப்புக்கு இணங்க

**கா. கி. கோபால் முதலியார்**

அவர்களால்

சென்னை சூளை,
ஸ்ரீ வேதவல்லி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1931. [அணா 1.

நெ. 27, அவதானப்பாப்பையர் 2-வது சந்து சூளை, மதராஸ்.

உ

முருகன் துணை.

தமிழ் நாடகாசிரியர்
ச. சு. சங்கரலிங்கக்கவிராயரியற்றிய

# பழநியப்பன்
# பஜனாமிர்தம்.

1950
784.0954

## முதற்பாகம்.

### விநாயகர் துதி வெண்பா.

வாக்குதவு நீடுநிதி வந்துதரும் வெந்துயரம்
போக்குமநுஷார்த்தமிகப்போதித் துண்—டாக்குமின்
ஆதித் தனியானை யானனவி நாயகன்றன் [பம்
சோதித்தண் சேவடிப்பூந் தாள்.

1950
784.0954

### ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் துதி.

### ஆசிரிய விருத்தம்.

தேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
மேலுண்டு முருகன் துணை
மிக்கநம் பிக்கைகொடு சற்ஜனர்க் குபகார
மேதந்த சத்ய விரதா

மாலுண்ட கண்டர்க்கு வோமென்ற பொருளோதி
மலைநின்ற தெகிவ மணியே
வாலையபி ராமிசிம காமிகுற மாமிதிரு
மடிமீ துலாவு முருகா

பாலுண்ட செந்தமிழ்ப் பஜனாமிர்தத் தியான
பாமாலை மருவு மழகா
பாதார விந்தமல் லாதுகதி வேறில்லை
பாலனெனை யாள வருவாய்

சேலுண்ட விழியுலவு தெய்வகுஞ் சரிவள்ளி
சித்தத் திருக்கு மதனா
தேசவிசு வாசமுரு கேசகவி ராஜர்துதி
செங்கிமா நகர் கந்தனே.

## முருகனிடம் என் முறைசொல்வாய் என்ற மெட்டு.

இராகம் - காம்போதி, தாளம் - ஆதி.

பல்லவி.

தூதுசென்றிதைச் சொல்லுவாய்கிளியே—நாளுந்
துதிக்குமடி யவர்க்குவர மளிக்குமறுமுகத்தினிடந் தூ

பல்லவி சந்தத்தோடர்.

1 துஷ்டர்க்கரு வறுக்க வுதித்த
சஷ்டிப்ரபு விடத்தை யடுத்து தூ
2 துணையென வடியவர் மனமதி
லிலகிய சிவகுரு பரினிடந் தூ
3 தொண்டருக்குத்தொண்டரென வந்தநீல
கண்டருக்கு மந்திரம்புகன்ற கந்தனிடந் தூ

அநுபல்லவி

வேதமாந்திருப் புகழுக்கினிய
விதரண சரவண பவகுக மகபதி மருமக னெனுமதி
மிக்கோர் போற்றும்
விண்முகப்பழநி சண்முகத்தினிடந் தூ

சரணம்.

சங்கீதகியானமுஞ் சாகித்யஞானமுஞ்
சாரீரசம்பத்துஞ் சகலசௌபாக்கியஞ்
சங்கரலிங்க சபாஜன மேன்மையுந்
தருவாயற்புத தெரிசனம் வருவாய் நற்றினமிதுவென
சந்தம் பொங்குந்
தத்துவ மி குத்தபள னிப்பதியி
ருக்குமுரு கப்பனிட மித்தருணந் தூ

## மயில்வாகனமேறி என்ற மெட்டு.

இராகம் - கமாஸ், தாளம் - ஆதி.

பல்லவி.

வடிவேலுட நேரில்வா முருகா வடி

பல்லவி சந்தத்தோடர்.

மா வி னோ த மேவு ஞான வடி
மன த் தி னிருளதை யகற்று மதுரித வடி
மடமதி விலகிட வருள்புரி விகசித வடி
வந்தின் பந்தந் தெந்தனை யாண்டிட வடி
வாரி நீரை வாரிமோத பாரசூர வீரதீரமிகு

225653

அநுபல்லவி.

படிபுகழ்சேவற் கொடிபெறுங்குமரா
பாலனுனதுதஞ்சம்பாதுகார்த்திடக்கொஞ்சம் வ

சரணம்.

கடிகமழ்சோலை கழுகுமாமலையாய்
காமவினையணுகா க்ஷேமமேதருவாய்
அடியவர்க்கெளியாய் அறுமுகமுடையாய்
அன்பன்சங்கரலிங்கம் பங்கில்தங்குமுனது வடி

## வேலுமயிலுந்துணை என்ற மெட்டு.

இராகம் - பைரவி, தாளம் - ஆதி.

பல்லவி.

* மூர்த்தி முருகன் துணை அழகிய சிவஷண்முக மூர்

அநுபல்லவி.

முழங்குந்தலங்கொண்டிலங்குங்கலியுகசிவஷண்முக மூ

சரணங்கள்.

1 கார்த்திகைக்கோர்பாலன் காத்தருள்செய்சீலன்
கந்தன் சம்பந்தன் வுமை மைந்தன்
காருண்ய சிவ சுப்ர மண்ய மூர்
2 சீர்த்திதரும் வேலன் தெய்வகுஞ்சரிலோலன்
தீரன்கெம்பீரன் சிங்காரன் சிவசரவண பவகுக மூர்
3 பூர்த்தமலர்த்தோளன் புள்ளிமயிலாளன்
போதன்விநோதன்சங்கீதன்சங்கரலிங்கக்கிரபாகர மூர்

## ஷண்முகா ஏழையென்மேல் என்றமெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

பக்திக்கோர் வித்வஞான பழநியப்பா
பாலகன்மீது வர்மமேது புகல்வாயெனப்பா ப

அநுபல்லவி சந்தத்தோடர்.

பற்றும் பவ வினையது
முற்றும் பொடிபட வரு பழநியப்பா ப

---

*'மூர்த்தி முருகன் துணை, என்றபாட்டை கானடாராகத்திலும் பாடலாம்
[illegible]லவியை இரட்டித்துப் பாடும்பொழுது, ஷண்முக சிவஷண்முக அழகிய
[illegible] என இணைத்துப்பாடவும்.

... பளவென வொளிதரு மயின்
மிசை நடமிடவரு பழநியப்பா ப

பகரருணகிரியின் பட்சத்தே
திருப்புகழை கற்பித்தே
விருப்பமொடு ரட்சித்தே
மகத்தவமிகு பழநியப்பா ப

சரணம்.

தித்திக்கும் பஞ்சாமிர்தமே தேனும் பாலும் பாகுஞ்சே
திவடிக் கனுதினமே ருந்
தியான நிஷ்டை தானளித்து
ஆணவத்தை யேவிலக்கிடாய்
சிவசமயத்தொளிர் முருகனெனப்புகழ் தேசிகனே
தித்திக்கும் பிரம்மானந்தமே
செந்திப்பதிவரு சொல்வப்பர் சங்கரலிங்கஞ்
சந்தத்தமிழது சொல்லப்பா சந்ததமெந்தன்
சொந்தத்துணையென நில்லப்பா சங்கமுழங்கும்
பழநியப்பா

கோருங்கள் கோருங்கள் கோருங்களே என்றமெட்டு.

பல்லவி.

பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே கொண்
டாடுங்கள் ஆடுங்கள் ஆடுங்களே

அநுபல்லவி.

பச்சைமயில் வாகனனை
மெச்சும்வள்ளி மோகனனைப் பா

சரணங்கள்.

வீடும்பொருளுஞ் சதமெனநாடி
மேலுமேலும்பல தேசங்களோடி
தேடுத்தொழிலில் தினந்தினங்கூடி
திரிவதிலென பலனறிவீர் நலமுதவுங்குருபரனைப் பா

மாதர்மக்கள் தருங் காதலினாலே
மானிடவாழ்வுமெய் யோபுவிமேலே
வாதுசெய்யேமன் வருகுமுன்னாலே
வரமருளுங்குகமனியெப் பழநிமலைக்குருபரனை...

தேனபிஷேகன் சிவசுப்ரமண்யனை
தீனர்க்ருபாகர ஞனலாவண்யன்
தானுனஞானந் தருமொருபுண்யன்
சங்கர்லிங்கர்க்கருள்செய்தங்கமயில்ஷண்முகனைப் பா

பால்காவடியானந்தம் என்ற மெட்டு.

பல்லவி.

பண்டாரந்தெண்டாயுதபாணி பாததெரிசனமேபழநிப்

அநுபல்லவி.

1 கண்டால்சிலாக்யங் காணு மாரோக்யங்
கலியுககந்தன் வுமைதருமைந்தன்
குறமகள்சொந்தன் குமரசு சந்தன் பண்

2 பாலாபிஷேகன் பரமவைபோகன்
பகருமருணகிரி தமிழில் நடனமிடு
முருகனிதயமயில் முதுகில்வருகுமரன் பண்

3 சத்ரு ச்ங்காரன் நித்ய சிங்காரன்
சங்கரலிங்க னி தந்துதி சந்தம்
ணங்கமழிங்கித சம்ப்ர ஷண்முகன் பண்

பாரெங்கும் புகழ்பெறுசரபம் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 ஞானப் பண்டிதவடி வேலா
நம்பும் பக்தர்க்கனு கூலா
கானப்பெண் வள்ளிம ணளா
கலியுகவரதா சுகு ணளா ஞா

2 தியானுப்பழனுபுரி வாசா
தெண்டாயுத பாணிவி லாசா
தேனைத்தரு மாமகள் நேசா
தேவா எமை யாள்முரு கேசா ஞா

3 வானத்தவர் போற்றும யூரா
மலைராஜகு மாரிகு மாரா
தீனர்க்கருள் செய்யுப காரா
சங்கர லிங்கக்கிர்பா கரா . ஞா

லவியை ஓ
... என ஓ

தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

பல்லவி.

தாதா நல் வரமெனக்குத் தாதா
தந்தாளுஞ்சிவ கந்தாதருணந் தாதா

அநுபல்லவி.

ஆதாரம் வேறு துணே
யாருமில்லைப் பாருமெனே
அழகியமலை மகனென தமிழ்க்
கழகமேபுகழ் பழநிவேலனே தா

தொகையறா.

பாதார விந்தத்தை பற்றினேன் பாலென்
துயர் நீங்கவே
ஆதார மாய்வந்து கார்த்தருள் வாய்நல்ல
புகழோங்கவே

பாட்டு.

ஆறுமாமுக விநோதா
ஆடுமயி லேறும்பாகா
அனுதினந்துதி சங்கரலிங்கனின்
மனதுலவிய ஷண்முகநாதனே தா

மதுரகான மிதுர்வசனி என்ற மெட்டு.

பல்லவி.

தணிகைமேவுங்கந்தசாமி ஜநோபகாரநாமி திருத் த

அநுபல்லவி.

பணியுமா லயன்பூமி
பதித பாவநீ பரமதேவநீ
பதாம்பு ஜந்தாராய்
தரணி புகழ் ...

22565

சரணம்.

கார்த்திகாவிரத ஞானபண்டிதா
கார்ப்பதுன்கடமை தானதண்டி தா
சீர்த்திதா சங்கரலிங்கம்
தியான ரட்சதா மோன வித்தகா
தேவா ஜீவா வாவா மஹானுபாவா திருத் த

மண்ணெடுத்தடிப்பட்டு என்ற மெட்டு.

1 ஆறுமுக மாகிமயி லேறுமுருகன்
ஆறுபடை கோயில்விளை யாடுமுருகன்
சீறுமசு ரேசர்க்கொரு வீரமுருகன்
சீலவனு கூலசுக லோலமுருகன்

கூறுமடி யார்களிடந் தீர்க்குமுருகன்
குன்று தோராடல்புரிந்து நின்றமுருகன்

கோலமுருகன்—கலி—காலமுருகன்
மயில்—வேலு முருகன்—தெய்வ
குஞ்சரி வனச்சிறுமி கொஞ்சுமுருகன் தினங்
கோருமென் மனதிற்குடி கொண்டமுருகன் ஆ

2 ஏரக நகருக்கலங் காரமுருகன்
ஈசனுக்கு ஞானவுப தேசமுருகன்
நாரணர்க் கொருமரக னமுருகன்
நம்புமடி யாரின்மனந் தங்குமுருகன்

பூரண தேவருக்குப காரமுருகன்
பூமியிற் புகழுங்கந்த சாமிமுருகன்

புண்யமுருகன்—கா—ருண்யமுருகன்
சுப்ர—மண்யமுருகன்—நல்ல

பொன்பரங்கிரிப்பழநி எங்குமுருகன் போற்றுஞ்
சங்கரலிங்கந் தமிழ்ப்ர சங்கமுருகன் ஆ

பழநியப்பன் பஜனமிர்த முதற்பாகம்

முற்றுப்பெற்றது.

ஆவணக்காப்பக நூலகம்
225.652
C08